பரமக்குடி நகராட்சி அலுவலகம்,
நாள்.16.11.2021

**<u>நிகழும் திருவள்ளுவராண்டு நவம்பர் மாதம் 17ம் நாள் (17.11.2021) காலை 11.30 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற உள்ள அவசரக் கூட்டப் பொருள்கள்</u>**

**பொருள்–1**

மாண்புமிகு நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களால் 2021–22–ம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத்தொடரில் 24–08–2021–ம் தேதியில் நகராட்சிகளில்அடிப்படை கட்டமைப்பு பணிகளை மேற்கொள்ள கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும் என வரப்பெற்றுள்ள அரசாணை எண்:70 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:13–09–2021–ல் வெளியிடப்பட்டது மேற்படி, திட்டத்தில் பரமக்குடி நகராட்சிக்கு மண்சாலைகளை பேவர் பிளாக் சாலைகளாக மாற்றிட ரூ.307.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி அளித்து அரசாணை எண்:90 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 30–10–2021–ல் வரப்பெற்றுள்ளது தனிஅலுவலரின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. அதன்படி, மேற்படி திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிகளுக்கான மதிப்பீடு தனிஅலுவலரின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. பணியின் விபரம் பின்வருமாறு

| S. No | Name of the Work | Length in Km | Breadth in m | Estimate Amount Rs. (in lakh) |
|---|---|---|---|---|
| 1 | Providing and Laying of Paver block surface and Construction of storm water Drain with Culvert at Devaraj nagar East 1st cross-(134001S007),west 2nd cross street- (134001R096),Muthaiahnagar 1st street (134001R098), Muthaiah nagar 2nd street(134001R099),Christian colony North main road(134008R188),1st cross Street (134008S028),3rd cross street (134008S029),Kamala nehru cross stereet(134016L026),Sowkathali street (134016L027), Muthuvai Timber East 5th st(134025S081),1st inner cross street(134025S082),2nd inner cross street (134025S083) ,Pallivasal south 1st street(134036L084),2nd street (134036S187) ,3rd street (134036R685) ,3rd inner street (134036L085) North 5th street (134036L091),Velunachiyar 1st street(134036S177),Velunachiyar 2nd street (134036S178),Muniyandipuram North 1st street (134036R674), Muniyandipuram North 2nd street (134036R677), Poovaisiyaindrakula west 4th main street (134025R512),1st main 3rd street (134025R513) ,Christian colony East 1st street(134008S31),2nd street | 3.289 | 1.40, 1.90, 2.20, 2.50 3.00, 3.20, 3.20, 3.30, 3.50, 3.60, 5.00, 5.20 | 307.20 |
| | | **3.289** | | **307.20** |

**அலுவலகக் குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம்.
2. திட்ட மதிப்பீடு தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், சென்னை அவர்களுக்கு சமர்ப்பித்து, தொழில்நுட்ப அனுமதி பெற்றிட மேல் நடவடிக்கை தொடரலாம்.

**தீர்மானம் எண்.1493, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்–2**

பரமக்குடி நகராடசியில் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு எண்.W.P(MD) No.11292/2010 மற்றும் W.P(MD) No.26334/2003–இல் நடைபெற்ற வழக்கு நீதிமன்றத்தில் தீர்ப்பு

| | |
|---|---|
| | பெறப்பட்டது. பரமக்குடி நகராட்சி சார்பில் ஆஜரான உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.பி.சீனிவாசன் என்பவர் வழக்கு தொடர்பான கட்டணம் ரூ.25000/– வழங்கக் கோரியுள்ளார். மேற்படி தீர்ப்பில் நகராட்சிக்கு சாதகமாக தனிநபருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளதை மறுபரிசீலினை செய்து உரிய உத்தரவு வழங்க மாவட்ட வருவாய் அலுவலருக்கு மூன்று மாத கால அவகாசத்தில் முடிவு செய்ய தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆகையால் மேற்படி வழக்கில் நகராட்சி சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு.பி.சீனிவாசன் அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணத் தொகை ரூ.25000/–த்தை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**தீர்மானம் எண்.1494, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–3 | இந்நகராட்சி எல்லைக்குள் வியாபாரம் செய்யும் சாலையோர வியாபாரிகளுக்கு அடையாள அட்டை தயார் செய்து வழங்கும் பொருட்டு பெறப்பட்ட விலைப்புள்ளி மூன்று 22.03.2021ம் தேதியில் வரப்பெற்றுள்ளது, பார்வைக்கும், அனுமதிக்கும்.<br><br>1. The Athens Charitable and Educational Trust - 295/-<br>2.Neer Thuligal Eyakkam - 400/-<br>3.Hagrois - 420/-<br><br>மேற்கண்ட பணிகள் அவசரம் அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>1. இப்பணிக்கு பெறப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளி குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள M/S ஏதென்ஸ் கார்டவுன் மற்றும் ஏஜிகேசன்ஸ் டிரஸ்ட் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.<br>2. இப்பணியின் அவசரம் கருதி தமிழ்நாடு மாநகராட்சி நகரமைப்புச் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் செலவினத்திற்கு ஒப்புதல் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**தீர்மானம் எண்.1495, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–4 | இந்நகராட்சியில் நடைபெறவிருக்கும் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் 2021க்கு உரிய வாக்குச்சாவடி மையம், மண்டல வரைபடங்கள் மற்றும் வாக்கு எண்ணிக்கை மையம் வரைபடங்கள் மொத்தமுள்ள 36 வார்டுகளில் 83 வாக்குச்சாவடி மையங்களுக்கு Auto Cadd வரைபடம் மற்றும் வாக்காளர் பட்டியலுக்கு தேவையான 4 போட்டோக்கள் எடுப்பதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.20,000/–க்கு மனற்த்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு–<br>1) தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி உத்தேச செலவினம் ரூ.20,000/–க்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்கண்ட செலவினம் மற்றும் உள்ளூர் விலைப்புள்ளி பெற்று உடன் பணிமேற்கொள்வதால், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 15ன் கீழ் பணியினை செய்ய அனுமதிக்கலாம்.<br><br>**தீர்மானம் எண்.1496, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–5 | தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு **2021–22**–ன் கீழ் இந்நகராட்சி பகுதிகளில் உள்ள பழைய கழிப்பறைகளை புதுப்பிப்பது தொடர்பாக அறிவிக்கப்பட்டதின் பேரில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்கள் அலுவலகம் கடிதம் எண்.ந.க.எண்.**2506/2021/இ2/** நாள்.**22.10.2021** திட்ட அறிக்கை சமர்ப்பிக்க கோரப்பட்டுள்ளது அதன்படி இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள **8–**வது வார்டு ஜீவா நகர், |

| | |
|---|---|
| | **30–**வது வார்டு உழவர் சந்தை ஆகிய இடங்களில் உள்ள சமுதாய கழிப்பறை **2–**எண்ணம் ரூ.**8.00** இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் மதுரை மண்டபம் சாலை , ஐந்துமுனை ரோடு, பேருந்து நிலையம் ஆகிய இங்களில் உள்ள பொதுப்பகழிப்பறைகள் **2–**எண்ணம் ரூ.**7.00** இலட்சம் மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் ரூ.**15.00** இலட்சம் மதிப்பீட்டில் பழுது நீக்க உரிய திட்ட பிரேரணை தயார் செய்யப்பட்டுள்ளது . மேற்படி தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு உரிய நிதி ஒதுக்க கோரும் பொருட்டு திட்டப்பிரேரணை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கவும் மேல் நடவடிக்கை தொடரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**தீர்மானம் எண்.1497, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–6 | இந்நகராட்சிக்குச் சொந்தமான குத்தகை இனங்கள் குத்தகைக்கு விடப்பட்ட கடைகளுக்கு 2010–2011 ஆம் ஆண்டு முதல் 2015–2016 ஆம் ஆண்டு வரை வாடகை வசூல் செய்யும் கேட்பு அறிவிப்பில் சேவைவரிக்கான கட்டணம் வசூல் செய்ய வழிவகை இல்லாததினால், 2010–2011ஆம் ஆண்டு முதல் 2015–2016ம் ஆண்டு வரை சேவைவரிக் கட்டணம் வசூல் செய்யவில்லை. ஆனால் சேவை வரிக்கான கட்டணம் ரூ.5726671/– யை, செலுத்தக்கோரி ஆணையர், சேவை வரி அலுவலகம், மதுரையிலிருந்து Show Cause Notice வரப்பெற்றது. சேவைவரி வசூல் செய்யாத வருடங்களுக்கு சேவை வரி கட்டணம் செலுத்த வழிவகை இல்லாததினால் தொகையினை சேவை வரி அலுவலகத்திற்கு செலுத்தவில்லை.<br>ஆனால் சேவை வரி ரூ.5726671/–யை, செலுத்தவில்லை என தெரிவித்து, பரமக்குடி பாரத மாநில வங்கியில் நகராட்சி ஆணையாளரின் பெயரில் உள்ள வங்கிக் கணக்குகளை முடக்கம் செய்ய கடிதம் வரப்பெற்றது.<br>எனவே, மேற்காணும் பொருள் தொடர்பாக, ஆணையர், சேவைவரி அலுவலகம், மதுரை அவர்களின் கடிதத்தின்படி, இந்நகராட்சி ஆணையாளர் பெயரில் பாரத மாநில வங்கியில் உள்ள கணக்குகளை முடக்காமல் இருக்க, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P(MD)No.19955, 19956 ,19957/2021 மற்றும் W.M. P.(MD)No.16657, 16656, 16661/2021-இன் வழியாக வழக்கு தொடரப்பட்டு, நகராட்சிக்கு சாதகமாக தடையாணை பெறப்பட்டுள்ளது.<br>மேற்கண்ட வழக்கினை சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் நகராட்சி சார்பாக ஆஜராகி வாதிடும் திரு.சி.முத்துசெல்வம், உயர்நீதிமன்ற வழக்கறிஞருக்கு வழக்கு கட்டணம் ஒரு வழக்கிற்கு ரூ.15000/– வீதம் 3 வழக்குகளுக்கு ரூ.45,000/–யை, வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**தீர்மானம் எண்.1498, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |